**முதன்மை சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**முன்னிலை: செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி, பொன்னேரி.**
**அ.வ.எண். 29/2012**

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் புதன்கிழமை.
இந்திய உறுதிமொழி சட்டம் (44–1969) 10 வது விதி 4 ம் பிரிவின் கீழ் முதன்மை சார்பு நீதிபதி செல்வி R. ஜெகதீஸ்வரி, எம்.எல்., அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

பி.சா.1. திரு. சுந்தர குமார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வழக்குரை பேரா 52 ல் கூறியுள்ள விவரங்களை நான் குறிப்பாக மறுக்கவில்லை என்றால் சரியல்ல. 01.06.2010 தேதியிட்ட ஒப்பந்தத்தை மிரட்டி வாங்கினார்கள் என்று நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. அந்த ஒப்பந்தம் கிழித்து போடப்பட்டது என்று என்னுடைய பதிலுரையில் கூறாமல் விசாரணையில் மட்டும் கூறியுள்ளது தவறு என்றால் சரியல்ல. மாடியில் இருந்த மின் இணைப்பை எனது பெயருக்கு மாற்றிவிட்டு மின் இணைப்பை துண்டித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது தந்தை பெயரிலிருந்த ஆவணங்களை காட்டிய பிறகு மீண்டும் மின் இணைப்பு கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை அந்த மின் இணைப்பிற்கு 3 ம் வாதியும் 4 ம் வாதியும் மின் கட்டணம் செலுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். ஆனால் மின் இணைப்பு என் பெயரில் உள்ளது. 3,4 ம் வாதிகள் ரூ.2,00,000/– ஐ கொடுக்க முற்பட்டு துறைமுக பொருப்பு கழகத்தின் கடனை அடைக்கும்படி கேட்டதற்கு நான் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் எனது அலுவலகத்தில் கடன்

வாங்கி கடனை அடைத்துவிட்டேன். நானும் எனது மைத்துனரும் அடியாட்களை வைத்து 3,4 வாதிகளை காலி செய்ய சொல்லி நிர்பந்தித்தோம் என்றால் சரியல்ல. 2011 ஜீலை மாதம் 3,4 வாதிகளுக்கு எதிராக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை அணுகி பரிகாரம் தேடிக்கொள்ள சொன்னார்கள் என்றால் சரிதான். 17.07.2013 ல் பேச்சு வார்த்தை நடந்தது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் 3 வழக்கறிஞர்கள் மற்றும் எனது மைத்துனர் பி.கே.விநாயகம் உட்பட சிலர் பேச்சு வார்த்தை நடத்தினார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு வழக்குரை பேரா 56 ல் கூறியுள்ளதை நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. வாலாஜாபேட்டை உதயகுமார் எனது நண்பர். அவர் தற்போது உயிரோடு இல்லை. அன்றைய பேச்சு வார்த்தை இரவு 9.00 மணிக்கு முடிந்தது என்றால் சரிதான். பேச்சு வார்த்தையில் பிரச்சனை பெரிதாகிவிட்டது. அப்போது ஒப்பந்தம் ஏற்பட்டு இரு தரப்பினரும் கையெழுத்து போட்டார்கள் என்றால் மிரட்டி கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஒப்பந்தத்தின் அசல் என்னிடம் கொடுக்கப்பட்டது என்றும் நகல் வாதிகளிடம் உள்ளது என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தை இரண்டு ஆவணங்களாக எழுதினார்கள். ஒன்றை வாதிகள் வைத்துக்கொண்டார்கள். மற்றொன்றை தூக்கி போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். வழக்குரை பேரா 58 ல் கூறியுள்ள விவரங்களை நான் மறுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகளிடம் கொடுத்த ஆவணம்தான் வா.சா.ஆ 13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது சரிதான். நிர்பந்தம் செய்து கையெழுத்து வாங்கியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. புரிந்தனர்வு ஒப்பந்தம் கட்டாயத்தின் பெயரில் ஏற்பட்டது என்று நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். 16.09.2011 அன்று

வாதிகளுக்கு எதிராக கேவியட் மனு எண் 87/2011 ஐ பொன்னேரி சார்பு நீதிமன்றத்திலும், மற்றொரு மனுவை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்தேன் என்றால் ஞாபகம் இல்லை. அந்த மனுக்களை வாதிகள் 14, 15 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. அந்த கேவியட் மனுக்களில் வழக்கு பி அட்டவணை சொத்தை 3,4 வாதிகளுக்கு எனது வீட்டு முகவரியை காட்டியுள்ளேன் என்றால் சரிதான். 20.09.2011 அன்று வாதிகள் பொன்னேரி காவல் ஆய்வாளருக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். 21.09.2011 ல் நான் வாதிகளுக்கு எதிராக பொன்னேரி காவல் நிலையத்தில் பொய்யாக புகார் கொடுத்தேனா என்றால் சரியல்ல. அதில் 3,4 வாதிகள் அத்து மீறி நுழைந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும் வாதிகள் அந்த புகாரின் பேரிலான முதல் தகவல் அறிக்கையை வா.சா.ஆ.18 ஆக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. 3,4 வாதிகள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் முன் ஜாமீன் வாங்கினார் என்றால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

2. 3ம் வாதி 1988லிருந்தும் 4ம் வாதி 2001ம் வருடத்திலிருந்து வழக்கு பி அட்டவணை சொத்தில் உள்ள வீட்டில் குடும்பத்தினருடன் வசித்து வருவதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். 2004ல் வீடு எனது பெயருக்கு மாறிவிட்டது. 01.06.2010 அன்று ஒரு ஒப்பந்தமும் 17.07.2011 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏற்பட்ட நிலையில் மற்ற குடும்ப உறுப்பினர்கள் நடவடிக்கை எடுக்காமல் தடுப்பதற்காக நான் பொய் புகார்கள் கொடுத்ததுடன் கேவியட் மனு தாக்கல்

செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து குறித்து சமரசம் ஏற்படாததால் வாதிகள் 03.11.2011 ல் எனக்கு அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் நான் அதற்கு 22.11.2011 ல் பதில் அறிவிப்பும் அனுப்பினேன் என்றால் சரியல்ல.

3. நான் பி அட்டவணை சொத்தில் உள்ள வீட்டின் தரைப்பகுதியில் கிழக்கு பக்க சுவரில் உள்ள ஜன்னலை எடுத்துவிட்டு வாசல் கால் வைத்தேன் என்றால் சரிதான். அதனால் 1,3,4 வாதிகள் 15.02.2012 அன்று அறிவிப்பு அனுப்பினார்கள் என்றும் நான் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ஞாபகம் இல்லை.

**வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பெயரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறு என்னால் தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம்/ கைரேகை பெறப்பட்டது. |

முதன்மை சார்பு நீதிபதி,
பொன்னேரி.